அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
Ang Mo Kio Tamil Methodist Church

18th அக்டோபர் / October 2026 ஞாயிறு ஆராதனை / Sunday Service

ஆராதனைக்கு அழைப்பு Call to Worship	**திருமதி. கோகிலா** Mrs. Kohila
இறைவணக்கப்பாடல் Introit	**பாடகர் குழு** Choir
ஜெபம் Prayer	**திருமதி. கோகிலா** Mrs. Kohila
தொடக்க பாடல் Opening Song	**சபையார் இணைந்து** Congregation

வா, பாவீ, இளைப்பாற வா

1. *"வா, பாவீ, இளைப்பாற வா,*
என் திவ்விய மார்பிலே
நீ சாய்ந்து சுகி," என்பதாய்
நல் மீட்பர் கூறவே;
இளைத்துப்போன நீசனாய்
வந்தாறித் தேறினேன்;
என் பாரம் நீங்கி இயேசுவால்
சந்தோஷமாயினேன்.

2. *"வா, பாவீ, தாகந்தீர வா,*
தாராளமாகவே
நான் ஜீவ தண்ணீர் தருவேன்,"
என்றார் என் நாதரே;
அவ்வாறு ஜீவ ஊற்றிலே
நான் பானம்பண்ணினேன்;
என் தாகம் தீர்ந்து பலமும்
பேர் வாழ்வும் அடைந்தேன்.

3. *"வா, பாவீ, இருள் நீங்க வா,*
நான் லோக ஜோதியே,
உன் நெஞ்சில் ஒளி வீசுவேன்,"
என்றார் என் நேசரே;
மெய்ஞான அருணோதயம்
அவ்வாறு நான் கண்டேன்;
அஞ்ஜோதியில் சந்தோஷமாய்
நான் என்றும் ஜீவிப்பேன்.

மாறி வாசித்தல் *42ம் ஞாயிறு* ***"சங்கீதம் 121"***	**சபையார் இணைந்து** Congregation

"கர்த்தர் உன்னைக் காக்கிறவர்"

Psalter Reading "Psalm 121"

தந்தை போற்றி Gloria Patri	**சபையார் இணைந்து** Congregation
துதி ஆராதனை Singspiration	
ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம் Thanksgiving & Pastoral Prayer	
பரமண்டல ஜெபம் Lord's Prayer	**சபையார் இணைந்து** Congregation
காணிக்கை பாடல் Offertory Song	**சபையார் இணைந்து** Congregation

தேவ சித்தம் நிறைவேற

தேவ சித்தம் நிறைவேற என்னையும் ஒப்படைக்கிறேன்
தேவசத்தம் என்னுள்ளம் பலமாகத் தொனிக்குதே

1. முட்களுக்குள் மலர்கின்றதோர்
மக்களைக் கவரும் லீலி புஷ்பம்போல்
என்னையுமே தம் சாயலாய்
என்றென்றும் உருவாக்கு வார்

2. பொன்னைப் போல புடமிட்டாலும்
பொன்னாக விளங்குவேனென்றென்றுமே
திராணிக்கு மேல் சோதித்திடார்
தாங்கிட பெலனளிப்பார்

3. அத்திமரம் துளிர் விடாமல்
ஆஸ்திகள் அழிந்து நஷ்டம் வந்தாலும்
கர்த்தருக்குள் சந்தோஷமாய்
நித்தமும் மகிழ்ந்திருப்பேன்

4. நீதிமானை அனுதினமும்
சோதிக்க பல்வேறு துன்பம் வந்தும்
கர்த்தர் அன்பை விட்டு நீங்கா
சுத்தனாய் நிலைத்திருப்பேன்

5. முன்னறிந்து அழைத்தவரே
முன்னின்று நலமுடன் நடத்துவார்
சகலமும் நன்மைக்கென்றே
சாட்சியாய் முடித்திடுவார்

6. சோதனையை சகிப்பவனே
சாந்தமும் பொறுமையு முள்ளவனே
ஜீவக்கிரீடம் பெற்றிடுவான்
ஜோதியாய் பிரகாசிப்பான்

7. கஷ்டமெல்லாம் தொலையும் ஓர் நாள்
கண்ணீரும் கவலையும் நீங்கும் அந்நாள்
இரட்டிப்பான பங்கைப் பெற
இரட்சகர் அழைத்திடுவார்.

✝ **பூலோகத்தாரே யாவரும்** — **சபையார் இணைந்து**
Doxology — Congregation

✝ **திருமறைப் பாடம்** — **மாஸ்டர். ஜோஹன்**
Scripture Reading — Master. Johan
ரோமர் 13 : 1 - 7
Romans 13:1 - 7

அருளுரை — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Sermon — Rev. Vijay Joseph

✝ **அர்ப்பணகீதம்** — **சபையார் இணைந்து**
Offertory & Closing Song — Congregation

<u>கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறாரே</u>

கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறாரே
தாழ்ச்சி அடையேன் என்றுமே
அவர் என்னைப் புல்லுள்ள - இடங்களில் மேய்த்து
அமர்ந்த தண்ணீரண்டை நடத்துகிறார் - கர்த்தர்

1. ஆத்துமாவைத் தேற்றும் நேசரென்னை
ஆனந்தத்தால் நிறைக்கிறாரே
மகிமையின் நாமத்தினிமித்தம் அவர்
தம் நீதியின் பாதையில் நடத்துகிறார் - கர்த்தர்

2. மரணப் பள்ளத்தாக்கில் நடந்திடினும்
மாபெரும் தீங்குக்கும் அஞ்சேன்
கர்த்தர் என்னோடென்றும் இருப்பதாலே
அவர் கோலும் தடியும் என்னைத் தேற்றும் - கர்த்தர்

3. சத்துருக்கள் முன்பில் எனக்காக
பந்தி ஒன்றாயத்தம் செய்தார்
என்னைத் தம் எண்ணெயால் அபிஷேகித்து
என்பாத்திரம் நிரம்பியே வழியச் செய்தார் - கர்த்தர்

4. ஜீவன் என்னில் உள்ள காலம் வரையும்
நன்மை கிருபை தொடரும்
கர்த்தரின் வீட்டில் நான் களிப்புடன் துதித்து
நித்திய நாட்களாய் நிலைத்திருப்பேன் – கர்த்தர்

அறிவிப்புகள்
Announcements

✝ **<u>மனப்பாட வசனம்</u>** — **சபையார் இணைந்து**
<u>Memory Verse</u> — Congregation
ரோமர் 13 : 8
Romans 13 : 8

8. ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்.

✝ **முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்**
Closing Prayer & Benediction

✝ **ஆசீர்வாதப் பாடல்**
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** **／Indicates Congregation standing**